2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கை விவாதத்தைத் தொடங்கிவைத்து உரையாற்றும் வாய்ப்பு வழங்குவது குறித்த பேரவைத் தலைவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) என்ன* Point of Order? *ஏற்கெனவே, பேசிய விஷயமாக இருந்தால் அதற்கு என்னுடைய அனுமதியில்லை. ஏற்கெனவே நான் இதற்கு நிறைய தீர்ப்பு சொல்லியாகிவிட்டது. இரண்டு, மூன்று நாட்கள் இதைப்பற்றி நாம் பேசிவிட்டோம். புதியதாக ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளில் உள்ள முரண்பாட்டினைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தவறான நடவடிக்கைகளிலே ஈடுபடுவார்களேயானால், அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்குவதற்கு விதிகள் 120, 121 ஆகிய இரண்டும் அதிகாரத்தை வழங்குகிறது. ஒருசில உறுப்பினர்கள் தங்களுடைய ஆணைக்குக் கட்டுப்படவில்லையென்றால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அந்த 120, 121 விதிகள் தங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஆனால், ஒருசில உறுப்பினர்கள் தவறு செய்வதை வைத்து, ஒரு கட்சியையே தண்டிப்பதற்கு 98—வது விதியைத் தாங்கள் பயன்படுத்தியது முறையானது அல்ல என்பதைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால், 98—வது விதி என்பது பொதுவான விதி. சான்றாகச் சொல்ல வேண்டுமென்றால், விதி 6—ன்படி உறுப்பினர்களின் இருக்கைகளைத் தாங்களே வழங்கலாம், எதிர்க்கட்சி தலைவருக்குக்கூட இருக்கையைப் பின்னாலே போடலாம். விதி 6—ன்படி அதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், அப்படி நாம் செய்வதில்லை. ஏனென்றால், சில மரபுகள், சில வரன்முறைகள், சில வரிசை முறைகளை நாம் பார்க்கின்றோம். தினந்தோறும் தாங்கள் திருக்குறளைக்கூறி மன்றத்தைத் துவக்கி எங்களுக்கெல்லாம் அறிவுரை கூறுகிறீர்கள்.*

[திரு. ச. இராமச்சந்திரன்] [2013 ஏப்ரல் 16

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்"

என்று திருவள்ளுவர் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். வரிசை என்பது தமிழ் மக்களால் மிகவும் போற்றப்பட்ட ஒன்று.

பிற்பகல் 12—25

இன்றைக்குக்கூட திருவிழாக்களிலே முதல் தீபாராதனை, திருமணங்களிலே முதல் தாம்பூலம் என்கின்ற வரிசை உண்டு. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்றபோது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தத் தீர்மானத்தை முன்மொழிகின்றார்கள். நிதிநிலை அறிக்கையோ அல்லது நிதி சம்பந்தப்பட்ட அறிக்கையோ மன்றத்தின்முன் வருகின்றபோது, எதிர்க்கட்சி, அதுவும் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சிதான் அந்த விவாதத்தைத் துவக்கி வைப்பது தொன்றுதொட்டு இருந்து வருகின்ற மரபு. ஆகையினால், இந்த மரபைத் தாங்கள் கவனத்தில் கொண்டு, தாங்கள் ஏற்கெனவே அளித்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்து, ** நிமிர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தமாக ஏற்கெனவே நான் நிறைய உங்களிடம் சொல்லியிருக்கின்றேன். இருந்தாலும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பி இருக்கின்ற காரணத்தினால், தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் பேரவையில் நடக்கும் விவாதங்களைத் தொடங்கி வைக்க அனுமதிக்கப்பட்டது. பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் பேரவையில் அவர்களுக்கு நேரத்தை அதிகமாக ஒதுக்கினேன். ஆனால், தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் பேச வேண்டிய அனைத்து விவரங்களையும் பேசிவிட்டு, கடைசியில் வேண்டுமென்றே தங்களுக்குப் போதிய நேரம் ஒதுக்கப்படவில்லை என்று கூறி வெளிநடப்புச் செய்வதை வாடிக்கையாகக் கொண்டார்கள். வேண்டுமென்றே அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதில்லை. மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதங்களில் வேண்டுமென்றே அவர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர். விவாதங்களுக்கு நேரங்களை ஒதுக்குவது பேரவைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 16] [பேரவைத் தலைவர்]

தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டது. அதேபோன்று எந்த வரிசையில் உறுப்பினர்கள் விவாதத்திற்குப் பங்குகொள்ள வேண்டும் என்பதும், ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதும் பேரவைத் தலைவரின் முழு விருப்பத்திற்கும் ஆளுகைக்கும் உட்பட்டது. இந்த நடவடிக்கைகள் குறித்து கவுல் அண்ட் சக்தார் எழுதியுள்ள Practice and Procedure of the Parliament என்ற நூலில், எந்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அனுமதிக்க வேண்டுமென்று மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பேரவைத் தலைவர் எந்த வரிசையில் பேச அழைக்கின்றாரோ, அந்த வரிசையின்படிதான் உறுப்பினர்கள் பேச வேண்டும்; இந்த வரிசையில்தான் நான் பேசுவேன் என்று எந்த உறுப்பினரும் உரிமை கோர இயலாது. பேரவை விதி 98—ன்படி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அழைக்கின்ற வரிசைப்படி உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று உள்ளது. நான் அவர்களுடைய நேரத்தைக் குறைக்கவில்லை. முதலில் பேசுவதால் மற்ற உறுப்பினர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. நேரம் இல்லாமல் போய்விடுகிறது. வேண்டுமென்றே 40 நிமிடம் 50 நிமிடம் பேசிவிட்டு, மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிற காரணத்தினால், அவர்களை நான் இறுதியாகப் பேச அழைத்திருக்கின்றேன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் அப்படியே இருக்கிறது. ஒதுக்கப்பட்ட நேரத்திலே இறுதியாக நீங்கள் பேசலாம். ஆகவே, இந்த விவாதம் இதற்கு மேலும் தேவையில்லை என்று சொல்லி, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, இந்த விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கு விதி 6—ன்கீழ் சட்டப் பேரவைத் தலைவருக்கு உள்ள அதிகாரத்தினை முழுமையாகச் சொல்லி, முழு அதிகாரமும் உங்களுக்கு இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டார். ஆனால், மரபு என்ற ஒன்று இருக்கின்றது என்று மாண்புமிகு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கின்றார்கள். ஏதாவது ஒரு உறுப்பினரைத்தான் நீங்கள் தண்டிக்க வேண்டுமேயொழிய,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 ஏப்ரல் 16

ஒட்டுமொத்த உறுப்பினரையும் தண்டிக்கக்கூடாது என்ற வகையில் அவர் பேசி இருக்கின்றார். மாண்புமிகு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அன்றைக்கு அவையில் இல்லை. ஆனால், அனைத்து உறுப்பினர்களுமே எழுந்து நின்று, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற செயல்களைத்தான் தொடர்ந்து செய்தார்கள். ஓர் உறுப்பினர் மட்டும் அல்ல; தொடர்ந்து தே.மு.தி.க. உறுப்பினர் ஒருவர் எழுந்திருந்தால், அனைவருமே எழுந்துகொள்கிறார்கள். அவர்கள் 40, 50, 60 நிமிடங்கள் பேசிவிட்டு, ஒவ்வொருவராக எழுந்து வெளியில் சென்றுவிடுகிறார்கள். இல்லையென்றால், வெளிநடப்புச் செய்கின்ற ஒரு சூழலை உருவாக்குகின்றார்கள். இல்லையென்றால் வெளியேற்றுகின்ற சூழலைத் தொடர்ந்து (குறுக்கீடு) உருவாக்கிக்கொண்டிருக்கின்றார்கள். இதுதான் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பத்திலிருந்தே இவர்கள் கடைப்பிடித்து வருகின்ற ஒரு மரபு. இதுதான் அவர்களுடைய மரபு என்று சொன்னால், சட்டமன்றக் மரபுப்படி மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதனை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதலில் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மரபுப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதனை அவர்கள் அறிய வேண்டும். நீங்கள் 40, 50 நிமிடங்கள் பேசி முடித்துவிடுகின்றீர்கள். உங்களுக்குப் பின்னால் வருகின்றவர்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கால நேரம் கருதி அவர்களுடைய நேரத்தை 10, 7, 5, 4 நிமிடங்கள் என்று குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. உங்களால் மற்ற கட்சிகளினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கான ஓர் அரிய வாய்ப்பு பறிபோகிறது. இதனை ஒரு வழிமுறைப்படுத்த வேண்டுமென்றுதான் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அனைத்துக் கட்சியினுடைய தலைவர்களோடும் கலந்து பேசியுள்ளார்கள். நீங்கள் பேசுங்கள், உங்களுக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நேரத்தில் கடைசியில் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். உங்களுடைய கருத்தைக் கேட்பதற்காக நாங்கள் உட்கார்ந்திருக்கின்றோம். நீங்கள் உட்காரவில்லையென்றாலும், நாங்கள் அதற்குரிய பதிலைத் தருவோம் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதை நான் நன்றாகக் கேட்டேன். இதிலே மூன்று பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை நாங்கள் குறை சொல்லவில்லை.

பிற்பகல் 12—30

தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவதிலே நீங்கள் மரபைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்கிறோம். இரண்டாவதாக, அத்தனை உறுப்பினர்களுமே தவறு செய்தாலுங்கூட அத்தனை உறுப்பினர்களையும் வெளியே அனுப்பத் தங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆகவே, உறுப்பினர்களின் நடவடிக்கை என்பது ஒன்று. நான் சொல்வது அமைப்பு முறை. சாதாரணமாக நிதிநிலை அறிக்கை வருகிறதென்றால், நாளைக்குப் பிரதான எதிர்க்கட்சி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைப்பு முறையில் கொடுத்திருக்கிற அந்தச் சலுகையை அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் இப்போது இருக்கிற பிரச்சினை. நீங்களே எனக்கு விதிகளையெல்லாம் வகுத்துக் கொடுத்துவிட்டு, அந்த விதிப் பிரகாரம் என்னை நடப்பதற்கு அனுமதிக்கவில்லையென்று சொன்னால், நான் எப்படி இந்தச் சபையை நடத்துவது? இந்தச் சபையை நடத்துவதற்கு நீங்கள்தான் விதிமுறைகளை வகுத்துத் தந்திருக்கிறீர்கள். வகுத்துத் தந்திருக்கிற இந்த விதிமுறைகளை வைத்துத்தான் நான் இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கிறேன். அதற்கு எனக்கு ஒத்துழைப்புத் தராமல் இப்படி நீங்கள் குறுக்கிட்டு, அவரவர்கள் சௌகரியத்திற்கு எழுந்துகொண்டு, அவரவர்களுக்குச் சாதகமானவற்றை மட்டும் பேசினால் எப்படி என்னால் இந்த அவையை நடத்த முடியும்? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் விதிமுறைப்படியும், மரபுப்படியும் நூற்றுக்கு நூறு சதவிகிதம் சரியாக சபையை நடத்திச் சென்றுகொண்டிருக்கிறீர்கள். ஆகவே, சட்டப் பேரவை

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ** என்று சொன்ன வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ** என்று சொன்ன அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இதுகுறித்து விளக்கமாகப் பேசியாகிவிட்டது. அதற்குமேலும் பேச வேண்டியது என்று ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் இன்றைக்குத்தான் அவைக்கு வந்திருக்கிறீர்கள். நான்கைந்து நாட்களாக அவர்கள் படுத்திய அவஸ்தை--இந்த அவையை நடத்தவிடாமல் எவ்வளவு கஷ்டம் கொடுத்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதெல்லாம், தவறு செய்கிற உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. நான் அதைக் கேள்வியே கேட்கவில்லை. ஆனால், ஒரு bad precedent வந்துவிடக்கூடாது. இன்றைக்கு நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கலாம். நாளைக்கு இன்னொரு எதிர்க்கட்சி வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வாய்ப்பைத்தான் தவறாகப் பயன்படுத்தி மற்ற உறுப்பினர்களுடைய நேரத்தை வீணடிக்கிறார்கள். அதனால் எனக்கு வேறு வழியில்லை. மற்ற உறுப்பினர்களுக்கு நான் பேச வாய்ப்புத் தரவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிற விதிமுறைகளைத்தான் நான் பின்பற்றுகிறேன். (குறுக்கீடு)

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நிமிடங்கள் என்றால் 10 நிமிடங்களுக்குள் cut பண்ணிவிட வேண்டும். நீங்கள் இருந்தபொழுது நான் அன்றைக்கு இங்கே இருந்தேன். இன்றைக்கு நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் அவர்கள் ஒத்துழைப்புத் தரவில்லை.

திரு. ச. இராமச்சந்திரன்: ஒத்துழைப்புத் தரவில்லையென்றால், அடுத்த மாண்புமிகு உறுப்பினரைப் பேச அழைப்பதுதான் முறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு முழுவதுமாக ஒத்துழைப்புத் தரவில்லை. இந்த அவையை அவமானப்படுத்துகிற மாதிரி பேசிவிட்டு, கடைசியாக உட்கார்ந்துவிட்டார்கள். அன்றைக்கு திருமதி சாந்தி, பேசிவிட்டு, நன்றி சொல்லி உட்கார்ந்துவிட்டார் நன்றி சொல்லிவிட்டு உட்கார்ந்ததற்குப் பின்னால், "எங்களுக்குப் பேச வாய்ப்பு கொடுக்கவில்லை" என்று சொல்லி. அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறார்கள். இதுவெல்லாம் முறையில்லாத செயல். இதற்கு மேலும் நான் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இதில் பேசுவதற்கு ஒன்றுமில்லை. என்னுடைய ruling–ஐக் கொடுத்தாகிவிட்டது. கொடுத்த ruling–ஐ நான் மாற்றுவதாக இல்லை. (குறுக்கீடு) இல்லை, கொடுத்த ruling ஏற்கெனவே இருக்கிறது. இதில் எந்தச் சலுகையும் இல்லை. அவையை நடத்துவதற்கு, எனக்கு நீங்கள் கொடுத்து இருக்கிற வழிமுறைகளை நான் கையாண்டிருக்கிறேன். ஆகவே, அந்த மரபுப் பிரகாரம், வரிசையாக யாரை அழைக்க வேண்டுமென்று பேரவைத் தலைவருக்கு இருக்கிற அந்த உரிமையைச் சரியாகவும், முறையாகவும் நான் பயன்படுத்துகிறேன். உங்களுக்கும் கடைசியாக நேரம் ஒதுக்கியிருக்கிறேன். நீங்கள் கடைசியில் கண்டிப்பாக பேசலாம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னது மாதிரி, எல்லோருமே அதைக் கேட்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதை விட்டுவிட்டு, முதலில்தான் பேசுவேன் என்று அடம் பிடிப்பது முறையல்ல. அது அவையை நடத்துவதற்குக் குந்தகமாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதில் ஒன்றும் விவாதம் இல்லை. உட்காருங்கள்; திரு. சு. குணசேகரன். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், இதிலே விவாதம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, என்னுடைய முடிவை இதற்கு மேலும் நான் மறுபரிசீலனை செய்கிற எண்ணத்தில் இல்லை. மறுபரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, பேரவைத் தலைவருடைய முடிவைக் கேள்வி கேட்கிற அதிகாரம் உறுப்பினர்களுக்கு இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட நடைமுறையை யாரும் பின்பற்ற வேண்டாம். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதில் நான் முடிவெடுத்துவிட்டேன். அந்த முடிவை மாற்றுவதாக இல்லை. (குறுக்கீடுகள்)

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மானியக் கோரிக்கைமீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, திரு. சு. குணசேகரன், இதில் விவாதம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர்களே போய்விட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இப்போது அதைத்தான் அவர் பேசினார். அதற்குப் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12—35

திரு. க. பாலகிருஷ்ணன், நான் இதுசம்பந்தமாக உங்களிடம் கேட்டுவிட்டுத்தான் செய்தேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் உங்களிடம் இதுசம்பந்தமாகக் கேட்டுவிட்டுத்தான் செய்தேன். (குறுக்கீடுகள்) திரு. சு. குணசேகரன், உங்களிடம் கேட்டுவிட்டுத்தான் செய்தேன். (குறுக்கீடுகள்) அவர்களே வெளிநடப்பு செய்துவிட்டு போய்விட்டார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், உங்கள் கட்சி உறுப்பினர் திரு. ப. டில்லி பாபுவை நான் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. ப. டில்லி பாபு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. சு. குணசேகரன். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, இப்படி வரிசையாக எல்லோரும் எழுந்து நின்றால் எப்படிப் பேசுவது? (குறுக்கீடுகள்) இல்லை, யார், எப்படிப் பேசுவது? (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாகப் பேசுவதாக இருந்தால் என்னுடைய அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் இதுசம்பந்தமாகப் பேசுவதாக இருந்தால், அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால், என்ன பேசப் போகிறீர்கள் என்று சொல்லுங்கள். நான் என்னவென்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாகப் பேசுவதாக இருந்தால் அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) இல்லை, வேறு விஷயம் என்னவென்று சொல்லுங்கள்; செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** *(குறுக்கீடு)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் திரும்ப அந்த விஷயத்திற்கே செல்கிறீர்கள். உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி பேசுவது அவைக்குறிப்பில் ஏறாது.

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. டில்லி பாபு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. டில்லி பாபு நீங்கள் பேசுங்கள்.

***திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 26–ன்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மனிதனின் வாழ்க்கையில் உணவு, உடை, இல்லம் இம்மூன்றும் மிக முக்கியத் தேவைகளாகும். மனிதன் பாதுகாப்பாக வாழ்ந்திடவும், சமூகத்தின் அங்கமாக நிலை பெறவும் வீட்டு வசதி என்பது மிக முக்கியமானதாகும். ரூ. 75 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான குடியிருப்பு உள்ளடக்கிய வீட்டு வசதித் திட்டம், தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ அறிவித்திருந்தாலும், இன்றைய மக்களின் தேவைகளுக்கேற்ப அரசு துரிதமாக திட்டத்திற்கான பணிகளை முடுக்கிவிட வேண்டியுள்ளது. 7 கோடியே 21 இலட்சம் மக்களில், 3 கோடியே 49 இலட்சம் மக்கள் நகர்ப்புறத்தில் வாழ்கின்றனர். அதாவது, 48.45 சதமான மக்கள் அதிகம் வசிக்கும் நகர்ப்புற மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது என்பது உண்மையே. இத்தகைய வளர்ச்சிக்கேற்ப வீட்டு வசதித் திட்டங்கள், உள்கட்டமைப்பு போன்றவைகளை மேலும் உருவாக்கிட வேண்டியுள்ளதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம்.

திருமழிசையில் ஒருங்கிணைந்த நகரம், அசோக் பில்லர் அருகில் 555 பல்லடுக்கு மாடிக் கட்டடம், கோயம்பேடு தெற்காசிய விளையாட்டு கூட்டமைப்பு கிராமத்தில் வணிக வளாகம் மற்றும்